# பத்தாம் வகுப்பு – அரையாண்டுப் பொதுத்தேர்வு – 2014-15

## தமிழ் முதல் தாள் - விடைக் குறிப்பு

## பிரிவு – 1

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. ஆ. சேர 1
2. இ. சடையப்ப வள்ளல் 1
3. ஆ. பெரிய புராணம் 1
4. இ. தேவாரம் 1
5. ஆ. உலவு 1
6. ஆ. இராமலிங்கர் 1

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

7. திருவாதவூர் 1
8. பன்னிரண்டு அடி 1
9. வரப்புகளாக 1
10. நகர்த்தும் வண்டியில் 1
11. பொருளியல் 1
12. தால் சுதாய் 1

### பகுதி - 3

**பொருத்துக**

13. திருநாவுக்கரசு 1
14. உமறுப் புலவர் 1
15. நல்லந்துவனார் 1
16. சாலை இளந்திரையன் 1

### பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க (வினா சரியாக அமைந்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்)**

17. பேச்சின் முக்கூறுகள் யாவை? 1
18. பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்? 1
19. செம்மொழிக்கு இலக்கணம் வகுத்தவர் யார்? 1
20. இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்கு எத்தனை ஆண்டுகள் பயில வேண்டும்? 1

## பிரிவு – 2

### பகுதி - 1

**எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்**

21.
1. உயிரினும் ஓம்பப் படுவது ஒழுக்கம் 1
2. ஏனெனில் அது ஒருவருக்கு எல்லாச் சிறப்புகளையும் தருகிறது. 1

22.
1. பிறர்க்குப் பணிந்து நடப்பான். ½
2. நல்வழியில் செல்வான். ½
3. சான்றோர் அறிவுரையை பின்பற்றி நடப்பான் ½
4. நுண்ணறிவு நூல்களை ஆராய்பவன். ½

23.
1. களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர். 1
2. வளமான இல்லற வாழ்வினை (அ) சிவபக்தியினை உடையவர். 1

24.
1. குகனின் மனம் ஊருக்குச் செல்ல இயலவில்லை. 1
2. அதனால் தன்னால் இயன்ற தொண்டினைச் செய்து இராமனுடன் இருக்க அனுமதி வேண்டினான். 1

25. 1. மனம் ½
2. புத்தி ½
3. சித்தம் ½
4. அகங்காரம் ½

26. 1. எவருக்கும் அடிமையாகாத தன்மையன் 1
2. ஒரு காதில் சங்கினாலான குண்டலத்தை அணிந்தவன். 1

27. 1. நந்திவர்மனை எதிர்க்கும் அறிவற்ற மன்னர்கள் 1
2. தம் உயிரை இழந்து தேவர் உலகத்தை ஆள்பவராவர். 1

## பகுதி - 2

**எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்**

28. 1. இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க 1
2. வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது 1

29. 1. ஒரு மொழிப் படத்தை 1
2. மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறை 1

30. 1. ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பெயர். 1
2. எவ்வித பற்றுக் கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருக்கிறது. 1

31. 1. குமரி மலை 1
2. ப∴றுளி ஆறு 1

32. 1. தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை. 1
2. தீமை செய்வதர்க்கும் நன்மையே செய், உண்மை பொருண்மை உண்டு. 1

33. 1. சாதிமத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கெலாம் உணவிட்டார். 1
2. மக்கள் அனைவரையும் உடன்பிறப்புகளாய் நேசித்தார் 1

34. 1. உயிரி-தொழில் நுட்பத் துறை 1
2. நுண்ணியல் தொழில் நுட்பத் துறை 1

## பிரிவு – 3

## பகுதி - 1

**எவையேனும் மூன்றனுக்கு மட்டும்**

35. 1. பல்வேறு துறை நூல்கள் தமிழில் வெளியிட வேண்டும் 1
2. தமிழ் மொழியை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும். 1
3. ஊர்தோறும் இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். 1
4. தமிழின் பெருமைகளை கூறுவதை விடுத்து குறைகளை நீக்கி புதுமை படைக்க வேண்டும் 1

36. 1. முன்வினைப் பயன் 2
 1. அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும், யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று.
 2. அ∴து அவரவர் தம் முன்வினைப் பயனே
2. உண்மையான செல்வம் 2
 1. தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரை கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே
 2. உண்மையான செல்வம் எனச் சான்றோர் கூறுவர்.

37. 1. இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால் ஓர் இரவுக்குள் என்னென்ன நேருமோ? 1
2. பணியை முடித்து ஓய்வு பெறுக ½
3. தம்பி! இனிக்கும் செய்திகள் உன் மனதில் வந்து குவியும் ½

4. செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை. 1
5. செடியின் வெற்றி பூவில் உள்ளது. ½
6. நமது வெற்றிகளால் நமது துன்பங்கள் யாவும் ஓடிவிடும். ½

38.
1. சீறா – வாழ்க்கை புராணம் - வரலாறு 1
2. நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினைக் கூறும் நூல் 1
3. விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. 1
4. இந்நூல் 92 படலங்களையும் 5027 பாக்களையும் உடையது 1

39.
1. குகன் நம்மிடம் நீங்காத அன்புடையவன் (பக்தியுடையவன்) 1
2. அனைவரிலும் இனிய நண்பன் 1
3. என்னுடைய அழியாத உயிர் போன்றவன் 1
4. எல்லாவற்றிலும் இனிய நண்பனே எம்மோடு இருப்பாயாக. 1

## பகுதி - 2

40.
1. கேட்போரை தன்வயப்படுத்த வேண்டும் ½
2. சுருக்கமான முன்னுரையுடன் தொடங்க வேண்டும். ½
3. மண்ணில் ஈரப்பதம் இருந்தால் தான் விதைக்க முடியும் என்பதுபோல கேட்போரை தன்வயப்படுத்த வேண்டும். 1
4. இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தொடக்கவுரை அமைதல் நன்று. 1
5. பேசத் தொடங்கும் தலைப்பில் ஓரிரு மணித்துளிகளில் புகுந்து பேச வேண்டும். 1

41.
1. மணக்கொடை ஒரு பெருநோய். 1
2. மகனின் கல்விச் செலவை முதலீடாய்க் கருதுகின்றனர். 1
3. அம்முதலீட்டை மருமகள் மூலம் மீண்டும் பெறநினைக்கிறார்கள் 1
4. இளைஞர்கள் இதனை தடுக்க வேண்டும் 1

42.
1. அம்பேத்கார் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். 1
2. மும்பையில் இவரின் அரிய முயற்சியால் உருவான சித்தார்தா உயர்கல்வி நிலையத்தில் இன்றைய வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. 3

43.
1. தமிழர்கள் கடல் வாணிகத்தில் தலை சிறந்திருந்தனர் ½
2. பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல் வாணிகம் செய்தனர். 1
3. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும், சந்தனமும் தமிழகத்தில் இருந்து அனுப்பப்பட்டன.1
4. தமிழர்கள் சாவக நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். ½
5. அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில் தோகையும், வாசனைப் பொருட்களும் அனுப்பப்பட்டன. 1

44.
1. காந்தியடிகள் கவர்ந்த நாடகம் - அரிச்சந்திர நாடகம் 1
2. அரிச்சந்திரன் உண்மையை மட்டுமே பேசும் அரசன், அவனை பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காக பல இன்னல்களைத் தருகிறார் விசுவாமித்திரர். 1
3. அதனால் அரிச்சந்திரன் நாட்டையும், மனைவியையும், மகனையும் இழந்து சுடுகாட்டில் பணிபுரிகிறான். 1
4. அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தியடிகள் தான் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என்று உறுதி கொண்டார். 1

## பிரிவு – 4

45. பாடல் வினா – விடை

1. கலித்தொகை 1
2. நல்லந்துவனார் 1
3. அறிவிலார் கூறும் சொற்களைப் பொறுத்தல் 1
4. ஒருபால் கோடாது ஒறுத்தல் (அ) வேண்டியவரென இரங்காதிருத்தல் 1
5. பொறுமை (அ) பொறுத்தல் 1

46. பத்தி வினா – விடை

1. மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம் 1
2. மேனிலைக் கல்வியில் உயர் மதிப்பெண் பெற்றோர் அந்தந்த பாடப்பிரிவின் தகுதிக்கேற்ப கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். 1
3. உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் பணிபுரிய வாய்ப்புகள் உண்டு. 1
4. உயிரி-தொழில் நுட்பத் துறை, நுண்ணியல் தொழில் நுட்பத் துறை 1
5. தலைப்பு : பல்துறை வேலை வாய்ப்புகள் (அ) தொழிற்கல்வி 1
(பொருத்தமான தலைப்பு தந்திருந்தால் மதிப்பெண் வழங்கவும்)

## பிரிவு – 5

### பகுதி -1

47. எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் 8

அ. குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடல்

குகன் : தேவனே! தாங்கள் உண்பதற்கு ஏதுவாக தேனையும் மீனையும் பக்குவப்படுத்தி கொண்டு வந்துள்ளேன். இதனை ஏற்றுக் கொள்வாயாக.

இராமன் : அன்பின் மிகுதியால் நீ கொண்டு வந்த பொருட்கள் அமுதத்தை விட சிறந்ததாகும். தூய்மையானதாகும், நாம் விரும்பி உண்டதற்கு சமம்.

குகன் : அரசர்க்கெல்லாம் அரசனே! தங்கள் தவக்கோலம் கண்டு ஊருக்கு செல்ல மனம் வரவில்லை. தங்களுக்கு அடிமையாய் இருந்து பணி செய்வேன்.

இராமன் : எல்லாவற்றிலும் இனிய நண்பனே! இங்கு எம்மோடு இருப்பாயாக.

குகன் : உமமோடு இருந்து தொண்டு செய்வேன் ( கங்கையின் மறு கரை அடைந்தனர்)

இராமன் : குகனே! நீ என்னுயிர் போன்றவன். இலக்குவன் என் தம்பி. சீதை உன் மைத்துனி. உன்னை தம்பி என்றழைக்கும் உரிமை எனக்குண்டு. துன்பம் என்பது இயற்கை. நாம் பிரிவதை பிரிவு என்று எண்ணவேண்டாம். முன்பு நாங்கள் நான்கு பேர் உடன் பிறப்புகளாக இருந்தோம். இப்போது உன்னையும் சேர்த்து ஐவரானோம்.

ஆ. பெரியாரை துணையாக கொள்வது குறித்து வள்ளுவர் கூறுவன 8

1. தம்மில் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் கொண்டு அவர் வழியில் நடத்தல் வேண்டும்.
2. அது வலிமைகளில் எல்லாம் சிறந்த வலிமையாகும்.
3. அறிவில் சிறந்த பெரியோரை சார்ந்து நடப்பவர்கள் வல்லவர்கள்
4. அவர்களுக்கு பகைவர் செய்யக்கூடிய தீங்கு எதுவும் இல்லை.
5. கடிந்து அறிவுரை கூறும் பெரியோரைத் தமக்குத் துணையாய் கொள்ள வேண்டும்
6. அப்படி கொள்ளாதவர் தனக்குப் பகைவர் இல்லையெனினும் கெடுவர்.
7. நல்லவர் ஒருவர் தொடர்பினை கைவிடுதல், பலரின் பகைமையைத் தேடிக் கொள்வதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமையைத் தேடிக் கொள்வதற்குச் சமம்.
8. எனவே பெரியாரைத் துணைக் கொள்ளல் அவசியம்

48. அ. அம்பேத்கர் அமைக்க விரும்பிய இந்தியா 8

1. சமுதாயத்தை அரித்துக் கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை அகற்றி சமுதாயத்தை சமப்படுத்த விரும்பினார்.
2. அந்நியர் தளையிலிருந்து விடுபடுவது மட்டும் விடுதலையல்ல, சமூகக் கேடுகளிலிருந்தும் விடுபடுவதுதான் உண்மையான விடுதலை என்றார்.
3. வேறுபாடற்ற மக்கள் சமுதாயத்தை கொண்ட இந்தியாவை உருவாக்க விரும்பினார்.
4. மக்களாட்சி என்பது வெறும் எஜமான மாற்றமாக அமையாமல் ஒடுக்கப்பட்டோர் கைகளில் அரசியல் அதிகாரம் வரவேண்டும் என்றார்.
5. அறியாமை, வறுமை, வேலைவாய்ப்பின்மை ஆகியவை இல்லாத இந்தியாவை அமைக்க விரும்பினார்.
6. கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய மூன்றும் பெற்று ஒவ்வொருவரும் முழு மனித நிலையை அடைய வேண்டும் என விரும்பினார்.
7. சாதி வெறியை அகற்ற வேண்டும் எனக் கூறினார்.
8. இவ்வாறு அம்பேத்கர் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதரையும் ஒரே மாதிரியாய் நடத்தும் சமத்துவ இந்தியாவை உருவாக்க விழைந்தார்.

ஆ. தமிழன் அறிவியலின் முன்னோடி 8

1. உலகம் தன்னையும் ஞாயிற்றையும் சுற்றி வருகிறது என்பதை தெரிந்திருந்ததால் சுற்றுதல் என்ற பொருளுடைய உலவு என்னும் சொல்லிலிருந்து உலகம் என்று பெயரிட்டனர்.
2. உலகம் எந்தவித பற்றுக் கோடுமின்றி அண்டவெளியில் தொங்கிக்கொண்டிருப்பதால் ஞாலம் என்று பெயரிட்டனர்.
3. ஐவகை மணிகளும், ஒளிவிடும் திறத்தினால் வெவ்வேறு பெயர்களை கொண்டுள்ளன. ஆனால் அவற்றின் மூலப்பொருள் ஒன்றே என்பதை சிலப்பதிகாரத்திலிருந்து அறிகிறோம்.
4. ஓர் அணுவினை சதக் கூறிட்ட கோணினும் உலன் எனக் கம்பரின் வரிகளிலிருந்து அணு சேர்ப்பு, அணு பிரிப்பு பற்றிய கருத்துக்களை அறிகிறோம்.
5. மருந்தாகி, தப்பா மரத்தற்றால் எனும் திருக்குறள் வரிகளிலிருந்து தமிழ் மருத்துவத்தின் தொன்மையை அறிகிறோம்.
6. பதினெண் சித்தர்களால் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.
7. புல்லாகி பூடாய் என்ற திருவாசக வரிகளிலிருந்து பல்வகை உயிர்களின் பரிணாம வளர்ச்சி அறிவு பற்றி அறிகிறோம்.

**பகுதி -2**

**49. செய்யுள் வடிவில் விடை**

அ. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து 2
தீதின்றி வந்த பொருள்.

ஆ. எய்தற் கரிய தியைந்தக்கால், அந்நிலையே 2
செய்தற் கரிய செயல்.

இ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும் 6
முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்
இடர்உற மறையோரும் எரியுறு மெழுகானார்.

ஆ. பன்னீர்செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அரசு உயர்நிலைப் பள்ளி – கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517

# பத்தாம் வகுப்பு அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2014-15
## தமிழ் இரண்டாம் தாள் விடைக்குறிப்பு

**மொத்த மதிப்பெண்கள்: 100**

| | | |
|---|---|---|
| | **பிரிவு - I** | மதிப்பெண்கள் : 20 |
| | **பகுதி - 1 உரிய விடை** | 5x1=5 |
| 1 | ஆ) இரட்டைக்கிளவி | 1 |
| 2 | இ) 8 | 1 |
| 3 | அ) ஆண்மகனின் ஒழுகலாறு | 1 |
| 4 | ஆ) 4 | 1 |
| 5 | இ) சொற்பொருள் பின்வருநிலையணி | 1 |
| | கோடிட்ட இடம் | 5x1=5 |
| 6 | ஐகாரக்குறுக்கம் | 1 |
| 7 | பூ, தீ (பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 1 |
| 8 | மலையும் மலை சார்ந்த இடமும் | 1 |
| 9 | போல | 1 |
| 10 | திசைப்பெயர் | 1 |
| | சுருக்கமாக விடையளி | 10x1=10 |
| 11 | தேன்மொழி திருக்குறள் கற்றாள் | 1 |
| 12 | சேரர், சோழர், பாண்டியர் | 1 |
| 13 | வேல்விழி திருவாசகத்தைப் படித்தாள் | 1 |
| 14 | எங்கள் தமிழாசிரியர் நடத்திய இலக்கணம் பசுமரத்தாணிபோல பதிந்தது | 1 |
| 15 | வழி, நதி, (எண்) | 1 |
| 16 | ஓரெழுத்தொரு மொழியில் வல்லினம் மிகும்<br>சான்று : தீ + சட்டி = தீச்சட்டி<br>(பொருத்தமாக எழுதியிருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | 1 |
| 17 | எதற்கும் பயன்படாத நிலம் களர் நிலம் இதனைப் பயவாக் களரனையர் கல்லாதவர் என்பார் திருவள்ளுவர் | 1 |
| 18 | நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள். | 1 |
| 19 | காகம் கரையும், குயில் கூவும் | 1 |
| 20 | தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளன. | 1 |
| | **பிரிவு - II** | மதிப்பெண்கள் : 10 |
| | **எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | 5x2=10 |
| 21 | பகுபத உறுப்பிலக்கணம்<br>புகுக - புகு + க<br>புகு - பகுதி<br>க - வியங்கோல் வினைமுற்று விகுதி | 1<br>1 |
| 22 | 1. மொழி மூன்று வகைப்படும்.<br>2. தனி மொழி, தொடர் மொழி, பொது மொழி | 1<br>1 |
| 23 | 1. சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்<br>2. பிரித்தால் பொருள் தராது<br>3. சான்று : பாவைப் **படபட**வென பேசினாள் | 1<br>1 |
| 24 | 1. ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தொடர்வது, ஒரு பொருட் பன்மொழியாகும்.<br>2. சான்று : நடுமையம், மீமிசை ஞாயிறு | 1<br>1 |
| 25 | 1. இரு சொற்கள் சேரும் பொழுது எவ்வித மாற்றமும் இன்றி, இயல்பாக சேருவது இயல்பு புணர்ச்சி<br>2. சான்று : பொன் + வளையல் = பொன்வளையல் | 1<br>1 |
| 26 | 1. தெய்வம் - திருமால்<br>2. மக்கள் - ஆயர், ஆய்ச்சியர்<br>3. உணவு – வரகு, சாமை<br>4. விலங்கு – முயல், மான், புலி | ½<br>½<br>½<br>½ |

| | | |
|---|---|---|
| 27 | 1. வெட்சி - பகை நாட்டில் உள்ள ஆநிரைகளை கவர்வது<br>2. கரந்தை - வெட்சி வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்பது | 1<br>1 |
| | **பிரிவு - III** | மதிப்பெண்கள் : 50 |
| | **பகுதி - 1 (இரண்டனுக்கு மட்டும் விடையளி)** | 2x5=10 |
| 28 | 1. அளவடிகளை பெற்று வரும்<br>2. இயற்சீர் பயின்று வரும்<br>3. ஆசிரியத் தளைகள் பயின்று வரும்<br>4. மூன்றடிச் சிற்றெல்லையும், பாடும் புலவனின் மனக்கருத்திற்கு ஏற்பப் பல அடிகளைப் பெற்று வரும்<br>5. அகவலோசை பெற்று வரும்<br>6. ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஏகாரத்தில் முடிவது சிறப்பு | ½<br>½<br>1<br>1<br>1<br>1 |
| 29 | 1. இக்குறட்பாவில் சொல் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது<br>2. **அணி இலக்கணம்** - செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருளைத் தருவது<br>3. **விளக்கம்** - இக்குறட் பாவில் துப்பு என்னும் ஒரே சொல் உண்பவர், உணவு, உண்ணும் பொருள் என பல்வேறு பொருள்களில் வந்துள்ளது. எனவே இது சொல் பொருள் பின்வரு நிலை அணி | 1<br>2<br>2 |
| | (அல்லது) | |
| | **பிறிது மொழிதல் அணி**<br>1. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது<br>2. **சான்று** : பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்<br>3. **விளக்கம்** : மென்மையான மயில் தோகையே ஆயினும், அதனை அளவுக்கு விஞ்சி வண்டியில் ஏற்றினால் அச்சு ஒடிந்துவிடும் என்பது உவமை.<br>பகைவர்கள் தனித்தனியே நோக்கும்போது மிக எளியோராயினும் ஒன்று கூடின் தனிப்பட்ட பகை மன்னன் எவ்வளவு வலிமை உடையவனாயினும் அவனை எளிதில் வென்றுவிடுவர் என்பது இதனால் பெறப்படும் பொருள். எனவே இது பிறிது மொழிதல் அணி | 2<br>3 |
| 30 | அலகிடல் | |

| வ.எண் | சீர் | அசை | வாய்பாடு | மதிப்பெண் : 5 |
|---|---|---|---|---|
| 1 | நன் /றிக் /கு | நேர் நேர் நேர் | தேமாங்காய் | |
| 2 | வித் /தா /கும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் | 2 |
| 3 | நல் /லொழுக் /கம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் | |
| 4 | தீ /யொழுக் /கம் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் | |
| 5 | என் /றும் | நேர் நேர் | தேமா | 2 |
| 6 | இடும் / பை | நிரை நேர் | புளிமா | |
| 7 | தரும் | நிரை | மலர் | 1 |
| | இக்குறட்பா மலர் என்னும் வாய்ப்பாட்டைக் கொண்டு முடிந்தது | | | |

| | | |
|---|---|---|
| | **பகுதி - 2 (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** | 2x5=10 |
| 31 | முன்னுரை | 1 |
| 32 | பொருளுரை | 3 |
| 33 | முடிவுரை | 1 |
| | பகுதி - 3 | 3+2=5 |
| 34 | ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. | |
| | அ. **அப்பா**, வருகிற **ஞாயிற்றுக் கிழமை** என்னுடைய **பிறந்த நாள் ஆனால்** நீங்கள் இன்னும் எனக்கு **பிறந்தநாள் ஆடை** எடுக்கவில்லையே, **ஏன் அப்பா?** என்னுடைய **நண்பர்களெல்லாம்** வீட்டிற்கு வரச்சொல்லி **அழைப்பு** விடுத்திருக்கிறேன். | 6 x½=3 |
| | ஆ. அரபு எண்களைத் தமிழ் எண்ணாக மாற்றுக.<br>6 - சா , 15 – கரு , 51 – ருக, 60 – சா0 | 4 x½=2 |

| | | |
|---|---|---|
| 35 | ஆங்கில உரைப் பகுதிக்குத் தமிழாக்கம். | 3+2=5 |
| | அ.<br>**கணினி**<br>1. இது கணினி காலம். இவை சாராசரி வாழ்வில் ஓர் அங்கம்.<br>2. தினசரி வணிகம், தொழிற்சாலைகள், நிறுவனம் தொடர்பாகவும், அரசு நிறுவனங்களில் அளவற்ற தகவல் பராமரிப்பு தேவைப்படுகிறது.<br>3. மிகச் சிறந்த அதிவேகத் தகவல் பராமரிப்புக் கருவிதான் கணினி | 1<br>1<br>1 |
| | ஆ தமிழ் பழ மொழிகள் (இரண்டனுக்கு மட்டும்)<br>1. மின்னுவதெல்லாம் பொன்னல்ல<br>2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்<br>3. தன் கையே தனக்குதவி<br>4. முயற்சி திருவினையாக்கும் | 2x1=2 |
| | பகுதி - 4 | மதிப்பெண்கள்: 5 |
| 36 | ஒன்றனுக்கு மட்டும் | 1x5=5 |
| | அ. பொருத்தமான சூழலில் எழுதியிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம் (அ)<br>ஆ. பொருத்தமான கவிதையாக எழுதியிருந்தால் மதிப்பெண் அளிக்கலாம் | |
| | பகுதி - 5 | மதிப்பெண்கள்: 5 |
| 37 | **பாநயம் பாராட்டல்**<br>**திரண்ட கருத்து:**<br>பல்வேறு துறை நூல்கள் தமிழில் வெளியிட வேண்டும், தமிழ் மொழியை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும், இலவச நூல் நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்துதல் வேண்டும், தமிழின் பெருமைகளை கூறுவதை விடுத்து குறைகளை நீக்கி புதுமை படைக்க வேண்டும்<br><br>**பொருள் நயம்:**<br>“உலகியலின் அடங்கலுக்கும், எவ்விடத்தும் பாய்ச்சி இலவச நூற் கழகங்கள் தகத்தகாயத் தமிழ் ஆகிய சொற்களில் பொருள் நயம் உணர முடிகிறது.<br>**மோனை:** முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.<br>சான்று : தலைமுறைகள் ….. தகத்தகாய<br><br>✠ **எதுகை:** இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை<br>சான்று : உலகியலின் - இலவச நூல்<br><br>✠ **இயைபு:** இறுதி எழுத்தோ,அசையோ, சீரோ ஒன்றுபட்டு வருவது இயைபு<br>சான்று : வேண்டும் …… வேண்டும் | 1x5=5<br>1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1 |
| | பகுதி - 6 | மதிப்பெண்கள்: 5 |
| 38 | **வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல்** | 1x5=5 |
| | 1. தேதி<br>2. கிளை<br>3. இடம்<br>4. கணக்கு எண்<br>5. பெயர்<br>6. உருபாய்<br>7. பண விவரம்<br>8. கையொப்பம் | ½<br>½<br>½<br>1<br>½<br>1<br>½<br>½ |

| | | |
|---|---|---|
| | பகுதி - 7 | மதிப்பெண்கள்: 5 |
| 39 | வாழ்வியல் சூழல்<br>அ. 1. தமிழரசனைப் போல் இருப்பது நல்லது.<br>2. நட்புடன் பழக வேண்டும். பிறருக்கு உதவிகள் செய்ய வேண்டும்.<br>3. உண்டு. 15 பேர் | 3+2=5<br>1<br>1<br>1 |
| | ஆ. 1. நாளை எனக்கு தேர்வு உள்ளது. நான் படிக்க வேண்டும என்ன செய்தியாக இருந்தாலும் அப்பா வந்தவுடன் பேசிக்கொள்ளுங்கள் என்பாள்.<br>2. அப்பாவிடம் செல் பேசியில் தொடர்பு கொண்டு பேசுங்கள் என்று கூறிவிடுவேன். | 1<br>1 |
| | பிரிவு - IV | |
| | பகுதி - 1 | மதிப்பெண்கள்: 10 |
| 40 | கடிதம் (ஒன்றனுக்கு மட்டும்)<br>அ. நண்பனுக்கு கடிதம்<br>1. முகவரி, தேதி<br>2. விளித்தல்<br>3. செய்தி<br>4. இங்ஙனம்<br>5. உறை மேல் முகவரி | 1x10 =10<br><br>2<br>1<br>5<br>1<br>1 |
| | ஆ. நூலக வசதி வேண்டி<br>1. அனுப்புநர்<br>2. பெறுநர்<br>3. விளித்தல்<br>4. பொருள்<br>5. செய்தி<br>6. இப்படிக்கு<br>7. இடம் தேதி<br>8. முகவரி | <br>1<br>1<br>½<br>4<br>1<br>½<br>1<br>1 |
| | பகுதி - 2 | மதிப்பெண்கள்: 10 |
| 41 | கட்டுரை (ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும்) | 1x10 =10 |
| | அ. (அ) ஆ.<br>தலைப்பு<br>முன்னுரை<br>பொருளுரை<br>உட்தலைப்புகள்<br>முடிவுரை | <br>1<br>1<br>5<br>2<br>1 |

ஆ. பன்னீர்செல்வம்
பட்டதாரி ஆசிரியர் (தமிழ்),
அரசு உயர்நிலைப் பள்ளி – கங்கலேரி – 635 122
கிருஷ்ணகிரி மாவட்டம்
அலைபேசி : 9940731517